கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கை , சென்னை – 10.

முன்னிலை : மரு.ந.சுப்பையன்,இ.ஆ.ப.,

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

********

சுற்றறிக்கை எண் : 1/2023
ந.க.எண்.55657/2018/வ.ஆ.1

நாள்: 26.07.2023.
ஸ்ரீசோபகிருது வருடம், ஆடி மாதம்
10 , திருவள்ளுவராண்டு 2054.

பொருள் : பணியாளர்கள் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வீட்டுவசதிக்கடன் தொகையின் உச்ச வரம்பினை ரூ.5/– இலட்சத்திலிருந்து ரூ.20/– இலட்சமாக உயர்த்தி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (டி) எண்: 364 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்.21.11.2000.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் ந.க.40757/2022/மவகொ1 நாள்:01.11.2022

ஆணை:

www.kalviseithi.net

பார்வை 1–இல் காணும் அரசாணையில் தன்னிறைவு பெற்ற பணியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தங்களின் உபரிநிதியினை லாபகரமாகப் பயன்படுத்தும் நோக்குடன் வீட்டு வசதிக் கடன் தொகையின் உச்ச அளவு ரூ.5,00,000/– த்தினை 180 மாதங்கள் சம தவணைகளில் பிடித்தம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 2–இல் காணும் பதிவாளரின் கடிதத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் வீட்டுவசதிக்கடன் தொகையின் உச்ச வரம்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கையின் அடிப்படையில் வீட்டு வசதி கடன் உச்ச வரம்பு தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) தற்போது பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வீட்டுவசதிக்கடன் தொகையின் உச்ச வரம்பினை உயர்த்தி வழங்கிடக் கோரிக்கைகள் பெறப்பட்டதை தொடர்ந்து அக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு மேற்படி வீட்டுவசதிக்கடன் தொகையினை ரூ.5/– இலட்சத்திலிருந்து அதிகபட்சம் ரூ.20/– இலட்சமாக உயர்த்தி வழங்க ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதியளிக்கப்படுகிறது.

1) தன்னிறைவு பெற்ற பணியாளர் கூட்டுறவு சங்கங்களில் மட்டுமே சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளரிடம் உரிய துணைவிதித் திருத்தங்கள் மேற்கொண்டு வீட்டு வசதி கடன் தொகை வழங்கப்பட வேண்டும்.

(த.பி.பா)

2) ஜாமீன் கடன் மற்றும் வீட்டு வசதிக்கடன் இரண்டும் சேர்த்து ரூ.20 இலட்சம் அல்லது உறுப்பினர்கள் பெறும் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியின் கூடுதலின் 25 மடங்கு எது குறைவோ அத்தொகையை வீட்டு வசதி கடனாக வழங்க அனுமதிக்கலாம்.

3) மேற்படி வீட்டு வசதி கடன் தொகையினை திருப்பி செலுத்தும் சம தவணை காலம் 180 மாதங்களுக்குட்பட்டு இருத்தல் வேண்டும். உறுப்பினரின் வயது வரம்பினையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

4) பணியாளர்களின் மொத்த ஊதியத்திலிருந்து அனைத்து பிடித்தங்களும் மேற்கொள்ளப்பட்டு பணியாளர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் சம்பளம் அவருடைய மொத்த ஊதியத்தில் 25%-க்குக் குறைவாக இருக்கக் கூடாது.

5) பணியாளர்கள் பணிபுரியும் அலுவலக சம்பளம் வழங்கும் அலுவலர்களுடன். கடன்தாரரின் சம்பளத்தில் கடன் தொகையினை பிடித்தம் செய்து பெற ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

6) பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் சங்கத்தின் நிதிநிலைமையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட சரகத் துணைப்பதிவாளரிடம் <u>தக்க துணை விதித்திருத்தங்கள் மேற்கொண்டு பதிவு செய்த பின்னரே</u> புதிய உச்ச வரம்பின் அடிப்படையில் கடன் வழங்கப்பட வேண்டும்.

3) மேற்கூறியவாறு வீட்டுவசதிக்கடன் தொகையினை அனுமதிக்கும் போது பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களின் நிதி நிலையை கருத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை வழுவாமல் பின்பற்றி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.20/- இலட்சம் வீட்டு வசதி கடன் வரம்பினை உயர்த்தி வழங்குவதை கண்காணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5) இச்சுற்றறிக்கையினை அனைத்துப் பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களுக்கும் மற்றும் அனைத்து சரகத் துணைப்பதிவாளர்களுக்கும் தொடர்புறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்)/- ந.சுப்பையன்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

28/07/23
1/2 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்காக

28/7/23

பெறுநர் :
கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்,
சென்னை மண்டலம் மற்றும்
அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள்.

நகல்: இருப்புக் கோப்பு.